1553

ஓம்.

தத்சத்.

பரப்பிரஹ்மணே நம:

19 SEP 1932

குரு தோத்திரக் கீர்த்தனை.

ஸ்ரீமத் அருட்கவி

ம. மு. வடிவேல்சாமி யவர்களால்

இயற்றப்பட்டது.

சென்னை

சுந்தரம் பிரஸில், பதிப்பிக்கப்பட்டது.

முதற் பதிப்பு.

1932.

Registered Copy Right.

விலை அணா 1.

பால் சார்ச்சுப் பிரத்தியேகம்.

Q2:417
N32
147863

ஓம்

குரு பரப்ரஹ்மணேநம:

29 SEP 1932
15537

திருத்துருத்தி-இந்திரபீடம்

ஸ்ரீ. கரபாத்திரசுவாமிக ளாதீன வழிவந்த

ஸ்ரீமத். தே. அ. சாமி குப்புசாமி

குரு தோத்திரக் கீர்த்தனை.

இது

ஷை ஸ்ரீமத். தே. அ. சாமி குப்புசாமி யவர்களின்
திருவடித் தொண்டர்களுள் ளொருவராகிய
மதுராந்தகம். அருட்கவி.
ஸ்ரீமான். மு. வடிவேல் சாமி யவர்களால்
இயற்றப்பட்டு

ஷை திருவடித் தொண்டர்களுள் ளொருவராகிய
சென்னை. இராயபுரத்திற் கடுத்துள்ள சிவஞானபுரம்
புராணிகர். ஸ்ரீமான்.
காளத்தி. இ. சிதம்பரசாமி பாண்டியரவர்களால்
பார்வையிடப்பட்டு

ஷை சிவஞானபுரம்.
நாடகாசிரியர்
ச. சு. சங்கரலிங்கக் கவிராய ரவர்களால்

சென்னை,
சுந்தரம் பிரஸில் பதிப்பிக்கப்பட்டது.

இதன் விலை] 1932. [அணா ஒன்று

147863
சென்னை-600 00
Q2(417)
N32

சாத்துகவி.

ஸ்ரீமத். ஆசிரியர். கோ. வடிவேலு செட்டியாரவர்கள்
இயற்றிய

நேரிசை வெண்பா.

சத்வகுண மார்ந்து தழைக்கும் வடிவேலன்
சித்திபெற கீர்த்தனைகள் செப்பமா—உத்தமனும்
சாமிகுப்பு சாமியெனும் தன்குருவின் மேற்பாடி
பூமியின்கண் பெற்றான் புகழ்.

2102
784.0954



திருத்துருத்தி, இந்திரபீடம், ஸ்ரீ, கரபாத்திர சுவாமிகளாதீனம்,
ஸ்ரீ, ஐயாக்கண்ணு தேசிகமூர்த்திகளின் மாணவர்
ஸ்ரீமத். தே. அ. சாமி குப்புசாமி.



திருத்துருத்தி, இந்திரபீடம், ஸ்ரீ, கரபாத்திர சுவாமிகளாதீனம்,
ஸ்ரீ தே. அ. சாமி குப்புசுவாமிகளின் மாணவர்,
ஸ்ரீமத். ம. மு. வடிவேல்சாமி.

ஓம் சற்குருவே நம:

சாமி குப்புசாமி யவர்களின்

தோத்திரக் கீர்த்தனை.

வெண்பா.

வேதமுத லானவனே வித்தகனே யென்னுள்ளே
போதமதைப் போதித்த போதகனே—பேதமற்ற
சாதனஞ்சொல் சாமிகுப்பு சாமிநின்றன் றாண்மலரை
யேதமறப் போற்றிடுவ னே.

இராகம்-இந்துஸ்தான் காபி, தாளம்-ஆதி.

தசரதராஜகுமாரா என்ற மெட்டு.

பல்லவி.

ஆண்டருள்வா யெந்தன் குருவே
அரிய திருவே வேத தருவே
மோன வுருவே. (ஆண்)

அநுபல்லவி.

ஆன்றோர் புகழுற மமைக்க வந்தோனே
ஆதி யந்தமிலா ஆனந்தத் தேனே
மூன்ற முத்தர்கள் தினம் போற்றும் சீமானே
புனித வடிவே யென்றன் சாமி
குப்புசாமி குருசாமி
ஞானசாமி. (ஆண்)

பொய்யா முடலைப் புகுத்தவா நீற்றி
பூரண நிலையைப் பொருந்தவே சாற்றி
உய்யுங் கதியை உறுதியா யேற்றி

அநுபல்லவி.

பொய்யுடம்பின் நினைவை முற்றும்
போக்கியருளு மெய்யன்
அய்யாக்கண் ணரியனு
ரருளைக் கொண்டவன்
அருளைக் கொண்டவன் பொல்லா
மருளை வென்றவன் (அய்யம்)

தொகையரு.

ஆயிரத்துத் தொளாயிரத்து முப்பத்தியொன்ருமாண்டில்
அணையாகஸ்டில்
நேயங்கொள் ஆடிகிருத்திகை தன்னில் திருத்தணிகை
நேர்தலத்தில்
நேய வடியார்கூடி சாமிகுப்புசாமி யெனும்
நிமலஞான
ஞாயிறனை யாய்நின்றன் திருவடிக்குப் பூசைதனை
நடத்த வெண்ணி

பாட்டு.

நேயர்களுனை யழைத்து
நிஷ்டா சனத்தில் வைத்து
சேய திருவடிகளுக்கு
செய்தாரே பூசை
செய்தாரே பூசை எவரும்
கொய்தாரே மாசை (அய்யம்)

என்ன புண்ணியஞ் செய்தேனோ
ஏழை வடிவேலன் நானும்
சின்மயானந்தனே வுன்னைச்
சேர்ந்த மாயமே
சேர்ந்த மாயமே நான்
தெரிந்த ஞாயமே (அய்யம்)

இராகம்-கமாஸ், தாளம்-ஆதி.

காமி சத்தியபாமா என்ற மெட்டு.

பல்லவி.

சாமி குப்புசாமி தயவே புரிவாய்
புரிவாய் புரிவாய் புரிவாய் எந்தன் (சாமி)

அநுபல்லவி.

1 காமாதிகளைப் போக்கி கற்பனைகளை நீக்கி
நேமமா யென்னை யாண்டவா
ஆண்டவா ஆண்டவா ஆண்டவா எந்தன் (சாமி)

2 பஞ்சபுலனொடுக்கி பாழ்மனத்தை யடக்கி
வஞ்சமில்லாமல் காத்தோனே
காத்தோனே காத்தோனே காத்தோனே எந்தன் (சாமி)

3 வையகந்தன்னில் வாடி வந்தேனுன் றனைத் தேடி
மெய்யனே யருள் தந் தாளுவாய்
ஆளுவாய் ஆளுவாய் ஆளுவாய் எந்தன் (சாமி)

4 அருணெறியை தொட்டே அவனிமாயை விட்டே
குருவருள் தன்னைக் கோரினேன்
கோரினேன் கோரினேன் கோரினேன் எந்தன் (சாமி)

5 சொல்லற் கரிதா யெங்கும் சுயஞ்சோதியாய் தங்கும்
நல்லவர்க்கேற்ற நாதனே
நாதனே நாதனே நாதனே எந்தன் (சாமி)

6 உன்னை நினைந்துதினம் உருகும் வடிவேல் மனம்
என்னையே வந்து ஆதரி
ஆதரி ஆதரி ஆதரி எந்தன் (சாமி)

இராகம்-செஞ்சுருட்டி, தாளம்-ஆதி.

பாரினிலே புகழ் பாரத புத்திரரே—என்ற மெட்டு.

பல்லவி.

குவலயம் போற்றிடும் குப்புசாமி குருவே (குவ)
உனைக்—கோரினேன் திருவே

அநுபல்லவி.

பவமொழித்திடும் பக்குவரைச்சாரும்
பரம சௌபாக்கிய விரத வைராக்கிய (குவ)

தொகையரா.

ஆன்ம நிலைதனை யுணர்த்தும் பரம்பரையில்
இந்திர பீடத்து வந்து
மேன்மையுற்று விளங்குமீசூர் சச்சிதாநந்தர்
வழி மேவி ஞானத்
தேன்பொழியும் சாமிகுப்பு சாமியைப்போல்
உபதேசஞ் செய்வாரிந்த
மானமலிந்த வையகத்திலில்லையென திடமாக
வழுத்துவ வேனே

பாட்டு.

உத்தம பக்குவர் நித்தியமும் தொழுது
ஒரு பழுதிலாது
நித்தியமு ஞானத்தத்துவங் கேழ்க்கிறார்
முத்த நின் சொல்வழி மோனத்திலாழ்கிறார் (குவ)

தொகையரா.

ஞான குரு தனைத்தேடி ஞாலமெலா மலைந்துழன்று
நைந்து நெஞ்சம்
ஆன திருவான்மியூர் கோவிந்தசாமிப் புலவர்க்
கரைந்தே னன்னாள்
வானவருங் காணரிய மகானுன நின்னுடைய
மகிமை யெல்லாம்
வான மழைபோல் பொழிந்தார் கேட்டுன்றன்
சன்னிதியை வந்தடைந்தேன்

பாட்டு.

ஆரியனைத்தேடி யலைந்துமே வாடி—வடிவேலன்
கொண்டாடி
பாரினிலிந்திர பீடமே நாடினேன்
பக்ஷத்துடன் திருப்பணிக் காளாகினேன் (குவ)

இராகம்-அடாணு, தாளம்-ரூபகம்.

முருகன் திருமால் மருகன் என்ற மெட்டு.

பல்லவி.

சுத்தன் சிவானந்த முத்தன் பெருமை—என்ன
சொல்வே னெங்கள் சாமிகுப்புசாமி சற்குரு (சுத்தன்)

அநுபல்லவி.

எத்திசையும் புகழ்ந்தேற்றும் பிரக்யாதன்
இருள் நீங்கிட வொளி பொங்கிட
அருளும் சிவ கருணாகரன் (சுத்தன்)

சரணம்.

காமமாதிகள் வந்தாலுமே யந்தக்கணத்தில் போக்கும்தீரன்
இன்னும்கருவி கரணங்கள் போரினை போக்கியே
காக்குந் தெருள்வீரன்
ஆமைம்புலச் சேட்டை யடக்கியாளு நாதன்
ஆங்காராதி களனைத்தும் போக்கு நீதன்
ஓமென்று நம்பி யிருக்கு முணர்வையே
உறுதிப்பெரு சுருதிப்படி
மனதிற்கருள் செயுமற்புத (சுத்தன்)

போதவிளக்கம் விபூதிவிளக்கம் புகல்கருணைவிளக்கம் நல்ல
பொன்னன்ன தான விளக்கம் கற்பு விளக்கம்
போற்றும் சாமி விளக்கம்
நாதன் குருஸ்தவம் நன்மதி தீபமும்

ஞான சார நூலும் நவிலுமில்லற நூலும்
காதலுடன் யாருங் காணுஞ் சொரூபானந்தம்
காசினியோர் பேசும்படி
மாசிலாத வாசகஞ்செய் (சுத்தன்)

விண்ணினில் நின்று விழுதிரங்கி யொன்று
வேரூன்றி வந்தாலும் அங்கே
வெந்து நீருன பிணங்கள் பின்னெழுந்து
விளையாட்டுப் புரிந்தாலும்
கண்ணிற் பலவித காக்ஷி யுதித்தாலும்
கல்லைப் பொன்னாக்கியே கையிற்கொடுத்தாலும்
விண்ணாட்டரசனும் வேண்டியே வந்தாலும்
விதியே எதிர் வரினுமவர்
மதியார் மறை பொருளார் பர (சுத்தன்)

இல்லற நடத்தும் யெழின்முறைகாட்டி
யிலகும் பிரமக்கியானி இந்த
இல்லறமென்பது நல்லறமென்றே எடுத்துரைக்கும் ஞானி
இல்லை யென்பார் தமக்கீந்திடுஞ் சின்மயன்
எளியன் வடிவேலன் ஏற்றுஞ் சிவமயன்
கொல்லும் புலன்வழி கூடாதவன் மெய்யன்
கூடும்வினை யோடும்படி
தியானந்தரு ஞானந்திகழ் (சுத்தன்)

இராகம்-பிலகரி, தாளம்-ரூபகம்.

ஆரடி மயிலே அச்சமின்றியே—என்ற மெட்டு.

பல்லவி.

ஆரணப்பொருளே அய்யமின்றியே வந்தாதரிப்பாய் (ஆரண)

அநுபல்லவி.

கோர நெஞ்ச சங்கார மோகமே
நேரா தெனக்கருள் (ஆரண)

சரணம்.

தொன்மை புண்ணியத் தொகையே யுருவாகி
சுவாமிகுப்புசாமி என்குருவாகி
அன்றே வந்தெதிர் நின்று நல்லருளை
நன்ருய் மொழிந்த (ஆரண)

தொண்டன் வடிவேலன் தூய்பணி தாங்கிட
அண்டபிண்டங்களு மெண்டிசை ஓங்கிட
கண்டேனுன் றனைக் கொண்டேனனவினிற்
விண்டிடப் போமோ (ஆரண)

இராகம்-பைரவி, தாளம்-ரூபகம்.

வருவாயே வடமாலி—என்ற மெட்டு.

பல்லவி.

வருவாயே குருநாதா
வந்தாதரி இன்றே என்னெதிர் (வருவா)

அநுபல்லவி.

தருவாயே யெந்தனுக் குந்தனருள்
சாமியே குப்புசாமியே—எதிர் (வருவா)

சரணம்.

இந்திர பீடத்திலகிய முன்னவா
யெழில் கரபாத்திரன் மரபினில் வந்தவா
பந்த மறுமையாக்கண் பாதம் பணிபவா
பலவாணவர்கள் துதிமேவிய
சுகதேவனே இதுவேளையில் (வருவா)

அப்பாதுரை கன்னியப்பன் வெங்கிடேசன்
அருளானந்தன் மதுரை துளசிராமன் கிருஷ்ணன்
செப்பும் சிதம்பரசாமி கோவிந்தசாமி
தினமுமிந்த மாணவர் துதி
மனதுகந்த என தொருநிதி (வருவா)

அன்பே யுருவா யவதரித்த தேவி
அம்மை காரைக்கா லம்மையான சொரூபி
என் தாயுண்ணாமுலை தன்னையாட்கொண்டவா
இலகியமுத் தேவிமார்க
ளழகிய சொற் பரவு தேவா (வருவா)

ஞானந்தரும் பல நூலை நவின்றவா
நானிலத்தோருக்கு நன்மை புரிந்தவா
தியானம் செய்யும் வடிவேலற் குகந்தவா
சின்மயதீத வதீதா
என் குருநாத விநோதா (வருவா)

பித்தம் தெளிய மருந்தொன்றிருக்குது என்றமெட்டு.

பல்லவி.

சித்தந் திருத்து மருந்தொன்றிருக்குது
திருவிந்த்ர பீடத்திலே (சித்தந்)

அநுபல்லவி.

ஞானத்—தத்துவமாகத் தழைந் தொளிருங் குப்பு
சாமி சாமி சாமி என்போருக்கு (சித்தந்)

சரணம்.

அத்வைத மார்க்கத்திலானந்திக்கச் செய்யும்
அம்மையப்பனனது நல்
லாகம நூலோர்க்கும் யோகசாதனர்க்கு
மறிவிற்கறிவானது
வித்வ வடிவேலன் வேண்டும் பொருளிது
விலையிடற் கேலாதது எவ்
வேளையு மன்பர்கள் சேவடி போற்றிடும்
வித்து வித்து வித்து வஸ்து மனமே. (சித்தந்)

இராகம்-செஞ்சுருட்டி, தாளம்-ஆதி.
யார் போய் சொல்லுவார் என்ற மெட்டு.

பல்லவி.

தூதார் செல்லுவார் என்னைவேண்டி
குப்புசாமி யாங் குருவிடம் (தூதார்)

அநுபல்லவி.

ஓது மிந்திரபீடம் உலகத்துயர்ந்த கூடம்
ஆதீனத்துக்காளாக வேண்டும்
அறிவு வேண்டும்
என்று சொல்லத் (தூதார்)

ஆங்காரத்தையடக்கி ஐம்புலனை யொடுக்கி
தூங்காமற் றூங்கும் சுகம்வேண்டும்
துணை வேண்டும்
என்று சொல்லத் (தூதார்)

ஞான நிலை யுணர்ந்து மோனவழி திரந்து
ஆன பொருளைக் காணவேண்டும்
அன்பு வேண்டும்
என்றுசொல்லத் (தூதார்)

சொல்லும் பிறவிவிடத் துறவு நிலையைத்தொட
நல்லசன் மார்க்கம் பெற வேண்டும்
ஞானம் வேண்டும்
என்று சொல்லத் (தூதார்)

தேசம் புகழும் வடிவேலன் துதிக்குமிந்த
பாசுரம் கேட்டருள வேண்டும்
பக்ஷம் வேண்டும்
என்று சொல்லத் (தூதார்)

மலடிவயிற்று மகன்போலே என்ற மெட்டு.

பிரிந்திசை சந்தக்குழிப்பு.

ஏதமிலாத நாதகுரு யிரு
பாதமதிலே யிச்சைகொண்டு
ஏதமறநான் பணிந்திடவே தினம் அருள்வாயே

வேதாகம கீதை விளம்புமதை
விரைவாக யுரைத்திடும் பூமானே
வேலை பிறவியை யானொழிக்க எதிர் வருவாயே

சாதனை நான்கு மடைந்தோனே யெந்தன்
சாமிகுப்புசாமி குரவோனே
சாமியே நன்னிலை யீமென்றே புகல்வாயே

ஆதவனைப் போலருள் மிளிரும்
அருளானந்த மதுதந்துமிக
அடக்கி யெந்தனை யாண்டருள் புரிந்தவா அருட்கண்ணா

வாத குரோத முள்ளவனும்
வடிவேலனுக்காக வருவாயே
மாதவத்தோர்கள் மனமகிழும் பெருமானே.

சரணகமலாலயம் என்ற மெட்டு.

தானதன	தானதத்த	தானதன	தானதத்த
தானதன	தானதத்த		தனதானா
சாதிகுல	பேதமற்ற	மாதவர்க	ளேதுதிக்க
தாரணியி	லேயுதித்த		பெரியோனே
சாதுநிலை	யேயுணர்த்தி	ஞானவமு	தேபுகட்டி
தாசனெனை	வாழவைத்த		குருநாதா
ஆதிமுத	லானவஸ்து	வேதவிளை	வானவித்து
ஆகமசொ	ரூபசித்து		வடிவாகி
ஆகியச	மாதிநிஷ்டை	கூடுமுயர்	வானவித்தை
யானரிய	வாசகத்தை		புகல்வாயே
கோதிகுழ	லே முடிக்கு	மாதரிட	மேவல்பெற்று
கோலவுட	லே வளர்க்கு		மதிமூடர்

கோபகுண லோபசித்தர் பாபபிர கீ[illegible]
கூடமதை யேவெறுத்த சுஜனுள்ள

தாதவிழு மாலைபெற்ற ஞானவுட லேயெடுத்த
தாபதர்க ளேதுதிக்க வருவோனே

த்தானவடி வேலுரைத்த தியானதமி ழேமணக்குஞ்
சாமிகுப்பு சாமியென்னும் பெருமானே.

கழைமுத்துமாலை என்ற மெட்டு.

தனதத்ததான தனதத்ததான
தனதத்ததான தனதானு

திருவுற்றசாமி புகழ்பெற்றசாமி
ஜெய முற்றசாமி சிவசாமி

ஜெகமெச்சு சாமி சுகதத்வசாமி
சினமற்றசாமி பவமேவு

கருவற்றசாமி ஒளிபெற்றசாமி
கபடற்றசாமி உயர்வான

கலைகற்றசாமி நிலையுற்றசாமி
கதிபெற்றசாமி யெனவோதி

வருபக்தர்சாமி தவநிஷ்டைசாமி
மனதொத்தசாமி அனதான

மலைபெற்றசாமி குணமுற்றசாமி
மருளற்றசாமி வடிவேலன்

தருவித்வசாமி தனரத்னசாமி
தயவுற்றசாமி புவிமீது

தவமுற்றசாமி எனதிஷ்டசாமி
சரண்குப்புசாமி பெருமானே.

பனியால் நனைந்து என்ற மெட்டு.

மலசிக்க லென்ற மலவாதை கொண்ட
மலேவாயுகந்து உழல்வேனே
மருந்தேயருந்தி உடலே வருந்தி
மனமே கசிந்து திரிவேனே
நலமாகு ஞான வமுதேயளித்து
நலியாவிதத்து னருளீந்து
நாடோறுமுன்னை நானே துதிக்க
ஞானனுபூதி தருவாயே
சில நாளில் முன்பு சிவ நிஷ்ட்டையன்பில்
திருப்பாலளித்த குருமூர்த்தி
திகழன்னதான வறமேதழைக்க
ஜென்மித்த தெய்வ வடிவோனே
தலமேவு மன்பர் துதியே மிகுத்த
சாமி குப்புசாமி பெயரோனே
சரணாரவிந்தம் வடிவேறகளித்து
தவமேவு மெங்கள் பெருமானே.

உடுமலேயின் முத்துசாமி பாட்டை யென்ற மெட்டு.

சுவாமிகுப்பு சாமியென்னும் குருவே உன்னைத்
தோத்தரித்தேன் சுப்ரதீப உருவே நீ
சுத்தமனதுடனே நித்தியமும் செய்துவரும்
சூக்ஷி சொல்வேன் மாக்ஷி.

நீர்க்குளித்து பூதியிட்டு வருவார் அவர்
நிர்மலமான பூஜை புரிவார் இன்னும்
நித்திய கடன்முடித்து சத்தியப்பொருளாய் நின்று
துலங்குவா ரெங்கும் விளங்குவார்.

தினம்தின மோய்வில்லாம லன்னம் பிச்சாங்
தேசி பரதேசிகளுக் கின்னம் எங்கள்
சுவாமிதன் சன்னிதானத்தில் நேமமாய் நடத்திவரச்
சொல்லுவார் யார்க்கும் விள்ளுவார்.

காலை பதினேழ்துநாழிக் காற்றி கதம்ப
அன்னமது தன்னைவண்டி யேற்றி ஏழைகள்
கண்ட கண்ட விடங்களெல்லாம் கொண்டுமே கொடுப்பீரென்று
சொல்லுவார் யார்க்கும் விள்ளுவார்.

தெருத்தெருவாய் சுற்றியல்லோ பார்த்து பசியால்
தியங்கும் ஜனங்களையே காத்து அங்கே
செவிடர் குருடர் முடவர் தீராக் குஷ்டரோகிகளுக்
கன்னம் யிடுவார் முன்னம்.

திருக்கழுக்குன் றம் திருத்தணிகை ஆதிபல
க்ஷேத்திரங்களில் திருப்பணியை அந்த
திருவிழாக்காலந்தோறும் தினம்தினம் தவராமல்
நடத்துவார் பவங் கடத்துவார்.

திருமிகுந்த திருவொற்றியூர் தன்னில் அவர்
செய்துவரும் தர்மமது என்னில் பிரதி
திங்கள் பூரணை தோறுந் துங்கமாய் நடந்துவரச்
செய்வார் அருள் பெய்வார்.

அன்னதானம் செய்வோ மென்றணைவோர் வந்
தடியிணைபோற்றி தர்மம் கேட்போர் அவர்க்
கானபொருளரிசியுடன் தானமாகயீந்திடுவார்
அத்தன் சுக சத்தன்.

அய்யன் வள்ளுவர் குரளிலொன்று அதி
காரம்மனனம் செய்துகொண்டு அங்கே
அன்புடனே ஒப்பிப்போருக் கைந்தணுவாகப்பரிசு
அளிப்பார் மனம் களிப்பார்.

விவகார காரியங்கள் பார்ப்பார் ஒரு
வில்லங்க மில்லாமலே தீர்ப்பார் அவரை
வேண்டி வருபவர்க்கோ ராண்டவன்போல நின்று
காப்பார் துதி யேர்ப்பார்.

ஞானிகள் செய்யும் விவகாரம் இந்த
நானிலத்தோருக் குபகாரம் என்று
நவிலும் வேதமொழிக்கு அவலமில்லாமலே
செய்வார் மருள் கொய்வார்.

சத்தியமான பொருளைக் காண்பார் ஜீவ
சாக்ஷிமாத்திரமாகு மாண்பார் அந்த
சங்கதியை சொல்லும்போது அங்கம் குளிர்ந்துயின்பம்
தங்கும் எங்கும் பொங்கும்.

வேதமுடிவான யென்குருவே வடி
வேலன் சிரமேற்சூடும் திருவே உன்னை
வேண்டித் துதிக்கும்போது ஆண்டவா யென்னுள்ளமதில்
கண்டேன் களி கொண்டேன்.

கால விபரீதத்தாலே என்ற மெட்டு.

கண்ணிகள்.

நன்றி யென்ன செய்வேன் என்குரு நாதற்கு
நானிந்த நாளினில் தானுமே
நன்று நன்று நன்றெனக் கவர் செய்திட்ட
ஞானவுபதேசம் தானுமே (நன்றி)

பூமிபுகழ் குப்புசாமியெனுங் குரு
போதனையைச் சொல்ல லாகுமா
ஆமொரு நிஷ்டையில் காக்ஷியளித்திட்ட
அன்பு மறந்திட லாகுமா. (நன்றி)

உயிர்போன காலத்திருக்கு முடம்பது
ஒன்றும் செய்யாததைக் கண்டேன்
ஒயிலான வுடம்பு நானல்லவென்னு
முபாயத்தை தெரிந்துகொண்டேன். (நன்றி)

கொண்ட கருத்தில் வுயிர்க்கோருயிரா
முணர்வுநா னென்றெளிர் கின்றேன்
விண்டவுனக்குக் கைம்மாறென்ன செய்குவேன்
வேளையிலே யோசிக் கின்றேன் (நன்றி

வேண்டும் திருப்பணி வேண்டிப் புரிவதென்
வேலையென்றே மனந்தேர்ந்தேன்
ஆண்டருளும் வடிவேலன் தமிழ் மாலை
யாதரிக்கக் களி கூர்ந்தேன்.

147863
சென்னை-600 005.
(நன்றி)

இராகம்-அமீர் கல்யாணி, தாளம்-ரூபகம்.

ஆலவாய் மதுராபுரி என்றமெட்டு.

தஞ்சமே வரங் கொஞ்சமே யருள்
சாமியே குப்பு சாமியே
சாமியே குப்பு சாமியே இந்த
பூமிபுகழுஞ் சு காமியே (தஞ்)

Q2:417
N32

தொகையரா.

வஞ்சகமிலாமலே மலரடி வணங்குவோர்
மாமாயை நீக்கும் விரதா
சஞ்சலமிலா தன்ன தானச் சிறுத்தொண்ட
சைவப்ர காச வரதா

பாட்டு.

கொஞ்சியேயுனை கெஞ்சினே னருள்
கொண்ட என்குரு மூர்த்தியே
கொண்ட என்குரு மூர்த்தியே நான்
கண்டுகொண்ட நற் கீர்த்தியே (தஞ்)

தொகையரா.

படிமீது வடிவேலன் றுதியேற்குமாதேவ
பரம சற்குரு நாதனே
அடியார்க்கு மடியேற்கு மாசிலாசிவபோத
மருளும் புண்ணிய நீதனே

பாட்டு.

வடிவிலாத சொரூபமாய் வளர்
வண்ணனே வேத மன்னனே
வண்ணனே வேத மன்னனே
வாழ்த்துஞ் சங்கர மங்கனே. (தஞ்)

ஸ்ரீமத். தே. அ. சாமி குப்புசாமி யவர்களின்
மாணவரிலொருவராகிய

ஸ்ரீமத். ம. அ வெங்கடேசப்பிள்ளை பாடியது.

நாதவிந்துகலாதி என்ற மெட்டு.

ஆனந்தப்பெருங்கடலே நமோ நம
மோனந்திகழ் குப்புசாமி நமோ நம
ஞானமளிக்கும் சுடரே நமோ நம . பெரியோனே

சத்துசித்தாநந்த பரமே நமோ நம
முத்திவீடளிக்கு முதலே நமோ நம
எத்திக்கும் தானுயிருப்பாய் நமோ நம எனையாள

சித்தமிரங்கிய திருவே நமோ நம
பக்தருளம் வளர்தருவே நமோ நம
கர்த்தனே எந்தனைக் காப்பாய் நமோ நம கழல்போற்றி

அரியயன் தேடிய அருளே நமோ நம
பொறிவழிக் கெட்டாப் பொருளே நமோ நம
சிறியனேன் விழுப்பம் தீர்ப்பாய் நமோ நம குருநாதா.

சென்னை-600 008